பிற்பகல் 2–50

(ஆ) கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.39,700,51,29,000/–, மூலதனக் கணக்கில் ரூ.598,41,26,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1–4–2023), சனிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

59. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் லிமிடெட்டின் நாற்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

2023 மார்ச் 31]

60. 2021—2022 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகம் லிமிடெட்டின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [*2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்* (*மத்தியச் சட்டம் 18/2013*) *395*(*1*) (b) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]. (தமிழ்—ஆங்கிலம்)

61. 2021—2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தணிக்கை அறிக்கை. [*1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்* (*தமிழ்நாடு சட்டம் 30/1983*) *80*(*9*) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]. (தமிழ்—ஆங்கிலம்)

62. 2021—2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [*2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்* (*மத்தியச் சட்டம் 18/2013*) *395*(*1*) (b) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]. (தமிழ்—ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

114. மானியக் கோரிக்கை எண் 20—உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

115. மானியக் கோரிக்கை எண் 43—பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

116. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 'அரசின் சாதனைகள் (2021–2023)' என்கிற சிறுநூல். (தமிழ்)

117. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 'சிறப்பான வளர்ச்சியில் சிங்கார சென்னை' என்கிற சிறுநூல். (தமிழ்)

118. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் '2021–2022 அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்' என்கிற சிறுநூல். (தமிழ்)

119. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் '2022–2023 அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்' என்கிற சிறுநூல். (தமிழ்)